செ.வெ.எண்: 12/ஏப்ரல் நாள்: 11.04.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016-ஐ முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள வாக்காளர் விழிப்புணர்வு பணிகளை ஆய்வு செய்திட

## இராமநாதபுரம் மாவட்டத்திற்கான வாக்காளர் விழிப்புணர்வு பார்வையாளர் திரு.ஆஷிஸ் கோயல் அவர்கள் வருகை

இராமநாதபுரம் மாவட்டம், சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016-ஐ முன்னிட்டு மாவட்ட நிர்வாகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு பணிகளை ஆய்வு செய்திட இந்திய தேர்தல் ஆணையத்தின் மூலம் நியமிக்கப்பட்டுள்ள இராமநாதபுரம் மாவட்டத்திற்கான வாக்காளர் விழிப்புணர்வு பார்வையாளர் திரு.ஆஷிஸ் கோயல் அவர்கள் நாளை (12.04.2016) மாவட்டத்திற்கு வருகை தந்து ஆய்வு மேற்கொள்ள உள்ளார்.

சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016-ஐ முன்னிட்டு மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பொதுமக்களுக்கு வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக துண்டுப் பிரசுரங்கள் வழங்குதல், மனிதச் சங்கிலி, விழிப்புணர்வு பேரணிகள், வாக்காளர் விழிப்புணர்வு மணற்சிற்பம் உள்ளிட்ட பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாவட்ட நிர்வாகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள இத்தகைய வாக்காளர் விழிப்புணர்வுப் பணிகளை ஆய்வு செய்வதற்காக இந்திய தேர்தல் ஆணையத்தின் மூலம் நியமிக்கப்பட்டுள்ள இராமநாதபுரம் மாவட்டத்திற்கான வாக்காளர் விழிப்புணர்வு பார்வையாளர் திரு.ஆஷிஸ் கோயல் அவர்கள் நாளை மாவட்டத்திற்கு வருகை தர உள்ளார்கள்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக கூட்டரங்கில் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள வாக்காளர் விழிப்புணர்வுப் பணிகள் குறித்து அனைத்துத் துறை அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டு அதன்பின்பு 13.04.2016 மற்றும் 14.04.2016 ஆகிய இரு தினங்கள் மாவட்டத்திலுள்ள பல்வேறு பகுதிகளில் நேரடியாகச் சென்று வாக்குச்சாவடி மையங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு செய்வதோடு, பொதுமக்களிடம் நேரடியாக கலந்துரையாடி கள ஆய்வு மேற்கொள்ள உள்ளார்கள்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**